6385

# மாகாணக் கல்வித் திணைக்களம் – வடக்கு மாகாணம்

(க.பொ.த) சாதாரண தரப் பரீட்சை - 2018

மூன்றாந் தவணை

சுட்டெண் : ............................

| குடியியற் கல்வி I, II | 62 | T | I, II | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|---|---|

பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி (x) இடுக
- அவ்விடைத்தாளில் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

01. புரதான காலத்தில் நேரடி ஜனநாயக ஆட்சியின் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டிருந்த அரசு
   1. சுவிட்சர்லாந்து 2. இந்தியா
   3. எதேன்ஸ் 4. ஐக்கிய அமெரிக்கா

02. பின்வருவனவற்றுள் ஆங்கிலப்புரட்சி (அமைதிப்புரட்சி) நடைபெற்ற ஆண்டு
   1. கி.பி 1789 2. கி.பி 1688 3. கி.பி 1776 4. கி.பி 1917

03. இரு கட்சி முறையைக் கொண்ட நாடுகள் இரண்டைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.
   1. இலங்கை, இந்தியா 2. கியூபா, வடகெரியா
   3. ஜேர்மனி, பிரான்ஸ் 4. பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா

04. பின்வருவனவற்றுள் பாராளுமன்ற அரசாங்க முறையின் பண்பு அல்லாதது
   1. நிறைவேற்றுத்துறையின் நிறைவேற்று அதிகாரத்தை செயற்படுத்துபவர் சனாதிபதியாவர்
   2. சட்டத்துறையால் நிறைவேற்றுத்துறையை பதவி விலக்க முடியும்
   3. சட்டத்துறையின் மூலம் நிறைவேற்றுத்துறை தெரிவு செய்யப்படும்
   4. சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்கும் நேரடித் தொடர்பு காணப்படும்.

05. "மத்திய அரசின் மேன்மை நிலையும் மேலதிக இறைமையுள்ள நிறுவனங்கள் அரசியல் யாப்பில் இல்லாது இருப்பதும் ஒற்றையாட்சியில் காணப்படும். பிரதான பண்பாகும்" இக்கருத்தினைக் கூறியவர்
   1. பேராசிரியர் ஏ.வீ.டைசி 2. பேராசிரியர் சீ.எப்.ஸ்ட்ரோங்
   3. கலாநிதி.கே.சீ.வியர் 4. பேராசிரியர் ஹர்மன் ஜே.பைனர்

06. கூட்டாட்சி அரசொன்றில் அதிகாரப் பகிர்வு நடைபெறுவது
   1. மத்திய அரசாங்கத்திற்கும் பிராந்திய அரசுகளுக்கும் இடையிலாகும்.
   2. மத்திய அரசுக்கும் பிராந்திய அரசுகளின் ஆளுநருக்கும் இடையிலாகும்.
   3. ஜனாதிபதிக்கும் பிராந்திய அரசுகளுக்கும் இடையிலாகும்.
   4. ஜனாதிபதிக்கும் மத்திய அரசுகளுக்கும் இடையிலாகும்.



kalvi.lk

07. கேகாலை, மொனராகலை ஆகிய மாவட்டங்கள் அமைந்து காணப்படும் மாகாணங்கள் முறையே
1. மத்திய மாகாணம், சப்பிரகமுவ மாகாணம்
2. ஊவா மாகாணம், சப்பிரகமுவ மாகாணம்
3. ஊவா மாகாணம், மத்திய மாகாணம்
4. சப்பிரகமுவ மாகாணம், ஊவா மாகாணம்

08. இலங்கையில் மாகாணசபை ஒன்றில் ஆளுநரை நியமிக்கும் அதிகாரம் உடையவர்
1. பிரதம நீதியரசர் 2. பிரதமர் 3. ஜனாதிபதி 4. முதலமைச்சர்

09. சுவிட்சர்லாந்தில் மத்திய அரசின் அதிகாரங்களுள் அடங்குவது
1. வெளிவிவகாரம் 2. கைத்தொழில்
3. வங்கி நடவடிக்கை 4. கல்வியும் உயர்கல்வியும்

10. மாகாணசபை ஒன்றின் அதிகாரங்களும் தொழிற்பாடுகளும் என்ற தலைப்பின் கீழ் இரண்டாவது நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை
1. 37 2. 36 3. 17 4. 15

11. ஐரோப்பாவில் தேசிய அரசுகள் பலமடைவதற்கு காரணமான அரசியல் சிந்தனையாளர் யார்?
1. ஜீன்போடின் 2. மொன்டெஸ்கியூ 3. ரூசோ 4. வோல்டேயர்

12. இலங்கையில் கடல் மற்றும் வான்பரப்புக் குற்றச் செயல்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் கொண்ட நீதிமன்றம்
1. உயர்நீதி மன்றம் 2. மேல் நீதிமன்றம்
3. மேன்முறையீட்டு நீதி மன்றம் 4. மாவட்ட நீதிமன்றம்

Education கல்வி

13. நிலம் மற்றும் மூலதனம் ஆகிய இரு உற்பத்திக் காரணிகளுக்கான கொடுப்பனவாக அமைவது முறையே
1. வட்டி, கூலி 2. கூலி, வட்டி 3. வட்டி, வாடகை 4. வாடகை, வட்டி

14. போலந்து, ருமேனியா, பல்கேரியா போன்ற நாடுகளில் பொருளாதார இயல்பு
1. சமதர்ம பொருளாதாரம் 2. முதலாளித்துவ பொருளாதாரம்
3. நிலைமாறும் பொருளாதாரம் 4. கலப்பு பொருளாதாரம்

15. பின்வருவனவற்றில் சேவை உற்பத்திகளாகக் கருதக் கூடியவை
1. இறைச்சியும், மரக்கறியும் 2. ஆடைகளும், இயந்திர சாதனமும்
3. மின்சாரமும், காகிதாதிகளும் 4. கல்வியும், சுகாதாரமும்

16. ஜொஹான் கல்டுனின் முக்கோண மாதிரியில் காட்டப்பட்டுள்ள மோதல் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்துகின்ற அடிப்படைக் காரணிகள் மூன்றையும் ஒழுங்கு முறையில் குறிப்பிடும் விடைத்தொகுதியைத் தெரிவுசெய்க.
1. நடத்தை, மனப்பாங்கு, சூழ்நிலை 2. மனப்பாங்கு, நடத்தை, சூழ்நிலை
3. சூழ்நிலை, நடத்தை, மனப்பாங்கு 4. சூழ்நிலை, மனப்பாங்கு, நடத்தை

17. தொழிலாளர்களுக்கிடையே தொழில்ரீதியான மோதல் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதனை ஜனநாயக ரீதியில் தீர்ப்பதற்கு பயன்படுத்தப்படும் மோதல் தீர்வு முறை
1. பேரம் பேசுதல் 2. கலந்துரையாடல் 3. நடுநிலையாளர் 4. இணக்கப்பாடு

18. இலங்கையில் இறுதியானதும் அதி உயர் மேன் முறையீட்டு அதிகாரமுடைய நீதிமன்றமாவது
1. மேல்நீதிமன்றம் 2. மேன்முறையீட்டு நீதிமன்றம்
3. உயர் நீதிமன்றம் 4. மாகாண மேல் நீதிமன்றம்


kalvi.lk

19. தொழில் நீதிமன்றத் தீர்மானங்கள் தொடர்பான மேன்முறையீடுகளை விசாரணை செய்யும் அதிகாரமுடைய நீதிமன்றம்

1. மேல்நீதிமன்றம் 2. மாகாணமேல்நீதிமன்றம்
3. உயர்நீதிமன்றம் 4. மாவட்ட நீதிமன்றம்

20. இலங்கையில் சிரேஷ்ட நீதிமன்றமான உயர்நீதிமன்றத்தின் தலைவர்

1. நீதி அமைச்சர் 2. பிரதம நீதியரசர் 3. பிரதம மந்திரி 4. சட்டமா அதிபர்

21. இலங்கையில் மனித உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை

1. 10 2. 19 3. 12 4. 20

22. இலங்கையில் பின்வரும் எந்த யாப்புச் சீர்திருத்தத்தின் மூலம் மந்திரிசபை (கெபினட்) ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது

1. கோல்புறூக் 2. டொனமூர்
3. சோல்பரி 4. முதலாம் குடியரசு யாப்பு

23. ஐக்கிய நாடுகள் சபையினால் மனித உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்டது

1. 1946 டிசம்பர் 10 2. 1947 டிசம்பர் 10 3. 1948 நவம்பர் 23 4. 1948 டிசம்பர் 10

24. பாராளுமன்றத்தின் பிரதான பணிகள் இரண்டைக் குறிப்பிடும் விடையைத் தெரிவு செய்க.

A. சட்டமியற்றுதல்
B. சட்டத்திற்கு விளக்கமளித்தல்
C. சட்டங்களுக்கு அங்கீகாரம் அளித்தல்
D. மனித உரிமையைப் பாதுகாத்தல்
E. சட்ட உருவாக்கத்திற்கான ஆலோசனைகளை வழங்கல்

இவற்றுள் சரியானவை

1. B யும் D யும் 2. A யும் C யும் 3. D யும் B யும் 4. C யும் E யும்

25.

- விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை அறிமுகப்படுத்தப்படல்
- பாராளுமன்ற ஆணையாளர் நாயகம் (ஒம்புட்ஸ்மன்) பதவி அறிமுகப்படுத்தப்பட்டமை
- நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி பதவி அறிமுகம் செய்யப்பட்டமை

மேற்படி மாற்றங்கள் எந்த அரசியல் அமைப்பின் கீழ் ஏற்படுத்தப்பட்டன.

1. 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்பு
2. 1947 ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் யாப்பு
3. 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியல் யாப்பு
4. 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பு

26. பின்வரும் மனித உரிமைகளுள் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்குள் அடங்காதது

1. வெளிநாடொன்றில் தஞ்சம் பெறுவதற்கான உரிமை
2. கல்வியை பெற்றுக்கொள்வதற்கான உரிமை
3. சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிடும் உரிமை
4. அரசியலில் பங்குபற்றுவதற்கான உரிமை


kalvi.lk

27. மனித வாழ்க்கைக்குத் தேவையான மூலப்பொருட்களான நிலம், கனிய வளங்கள், இரசாயனப்பொருட்கள், விலங்குகள், தாவரங்கள், உணவுகள், போன்றவை சூழலில் இருந்து கிடைக்கும் சேவைகளுள் எவற்றில் உள்ளடங்குகின்றன.

1. பொருளாதார உதவிச்சேவைகள் 2. கழிவு உறிஞ்சல் சேவைகள்
3. வாழ்க்கைக்கு உதவும் சேவைகள் 4. மேற்கூறிய எல்லாம் சரி

28. இலங்கையில் 2012ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி 11.2% சதவீதமாகக் காணப்படும் இனத்தவர்கள்

1. இந்தியத்தமிழர் 2. இலங்கை முஸ்லீம்கள்
3. இலங்கைத் தமிழர் 4. வேறு இனத்தவர்கள்

29. மனிதனின் அபிவிருத்தி மட்டத்தை அளவிடும் சார்பளவு சுட்டியாகக் கருதப்படும் சுட்டியானது

1. மனித வறுமைச் சுட்டி 2. மனித அபிவிருத்திச் சுட்டி (HDI)
3. பௌதிக வாழக்கைப்பண்புச் சுட்டி (PQC) 4. மனித அழுத்தச் சுட்டி

30. அபிவிருத்தியை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் சுட்டிகளில் பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டியை அளவிட பயன்படுத்தப்படாத அம்சம் எது?

1. கொள்வனவுச் சத்தி 2. எழுத்தறிவு
3. சிசுமரண வீதம் 4. பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்ப்பு

31. இலங்கையில் மனித உரிமைகள் ஆணைக்குழு

1. 1980ம் ஆண்டின் 20ம் இலக்க கட்டளைச்சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்டது.
2. 1982ம் ஆண்டின் 42ம் இலக்க கட்டளைச்சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்டது.
3. 1987ம் ஆண்டின் 15ம் இலக்க கட்டளைச்சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்டது.
4. 1996ம் ஆண்டின் 21ம் இலக்க கட்டளைச்சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்டது.

32. A. இணையப்பயன்பாடு

B. தனிநபருக்கான தலாதேசிய உற்பத்தி

C. மனித அபிவிருத்திச் சுட்டி

D. பொருளாதார வளர்ச்சி வேகம்

அபிவிருத்தியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் மேற்குறிப்பிடப்பட்ட முறைகளில் நவீன முறைகள் மட்டும் உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.

1. A யும் Cயும் 2. A யும் B யும் 3. C யும் D யும் 4. D யும் E யும்

33. 1985ம் ஆண்டு டிசம்பர் மாதம் 08ஆம் திகதி சார்க் சாசனம் ஏற்படுத்தப்பட்டது. இச் சாசனத்தில் அரச தலைவர்கள் கையொப்பமிட்ட நகரம் எது?

1. புதுடில்லி 2. கொழுப்பு 3. காத்மண்டு 4. டாக்கா

34.

- வலய நாடுகளின் வர்த்தகத்தை மேம்படுத்தல்
- வளங்களை செயற்திறன் மிக்கதாகப் பயன்படுத்துதல்
- வரிச்சலுகைகளை பெற்றுக்கொடுத்தல்

மேற்கூறப்பட்ட நோக்கங்களைக் கொண்ட அமைப்பு எது?

1. ஆசியான் (ASEAN) 2. கொழுப்புத்திட்டம் (Colombo Plan)
3. சப்ரா (SAPTA) 4. சவ்ரா (SAFTA)


kalvi.lk

35. (Bimstec) பிம்ஸ்டெக் அமைப்பில் அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை

1. 7  2. 6  3. 5  4. 4

36.
- அமைப்பின் ஆண்டறிக்கையை தயாரித்து முன்வைத்தல்
- ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படையை நிர்வகித்தல்
- பிரச்சினைத் தீர்வின் போது சமதானத் தூதுவனாகத் தலையிடுதல்.

மேற்கூறப்பட்ட பணிகள் ஐக்கிய நாடுகள் சபையின் எந்த நிறுவகத்திற்கு உரித்தானவையாகும்.

1. சர்வதேச நீதிமன்றம்  2. செயலகம்
3. பொதுச்சபை  4. பாதுகாப்புச் சபை

37. பொதுநலவாய வெளிநாட்டு அலுவலர்களின் அமைச்சர்களின் கலந்துரையாடல்களுக்கு அமைவாக கொழுப்புத் திட்டம் 1950 ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது இலங்கையின் நிதி அமைச்சராகக் கடமையாற்றியவர்

1. J.R ஜயவர்த்தன  2. N.M பெரேரா
3. ரணசிங்க பிறேமதாச  4. கொல்வின் R.D சில்வா

38. நிலையான அபிவிருத்தி தொடர்பாக பிரஜைகளின் கடமையாகக் கருதக்கூடியது பின்வருவனவற்றுள் எது?

1. சூழல் பாதுகாப்பு வேலைத்திட்டங்களை தயார்படுத்தி நடைமுறைப்படுத்துதல்.
2. சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடத்தல்.
3. சூழல் நேயப்பொருட்களையும் சேவைகள் வழங்குவோரையும் ஊக்குவித்தல்
4. சுற்றாடல் சுகாதாரங்களை அறிமுகம் செய்தல்

39. சகலருக்கும் உயர் சுகாதார சேவையை வழங்குவதற்காக செயற்படுதல், நோயற்ற சிறந்த தேகாரோக்கியமும் மனநிலையுமுடைய சுகாதார நிலையை உறுதிப்படுத்துதல் போன்ற நோக்கங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் இணை நிறுவனம்

1. உணவு விவசாய ஸ்தாபனம் (F.A.O)  2. உலக உணவுத் திட்டம் (W.F.P)
3. உலக சுகாதார ஸ்தாபனம் (W.H.O)  4. உலக வங்கி (World Bank)

40. இலங்கையில் பின்வரும் எந்த அரசியல் யாப்பின் மூலம் முதன்முதலாக அரசியல் யாப்பு நீதிமன்றம் உருவாக்கப்பட்டது?

1. டொனமூர் அரசியல் யாப்பு (1931)
2. சோல்பரி அரசியல் யாப்பு (1947)
3. முதலாம் குடியரசு அரசியல் யாப்பு (1972)
4. இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பு (1978)



kalvi.lk

kalvi.lk

## 62 குடியியற்கல்வி II

முதலாம் வினா கட்டாயமானதாகும்

முதலாம் வினாவுக்கும் வேறு நான்கு வினாக்களும் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

i. நேரடி சனநாயக ஆட்சி முறையினைத் தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் இரண்டினைக் குறிப்பிடுக?

ii. அரசியல்கட்சி முறையின் அனுகூலங்கள் இரண்டு தருக?

iii. சனநாயக ஆட்சிக்குட்பட்ட சமூகத்தில் சனநாயக ஆட்சி வெற்றி பெறுவதற்கு எதிர்கட்சியின் பொறுப்புகளும் கடமைகளும் இரண்டு குறிப்பிடுக?

iv. ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் சமஷ்டி யாப்பின்படி மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

v. சர்வதேச மோதல்களின் இரண்டு வகைகளையும் குறிப்பிடுக?

vi. சர்வதேச மனித உரிமைகள் சட்டம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை பிரதான ஆறு சட்டங்களை உருவாக்கி உள்ளது. அவற்றுள் இரண்டினைக் குறிப்பிடுக?

vii. மனித நடவடிக்கைகளினால் கற்கோளம் பாதிக்கப்படுவதனால் ஏற்படும் விளைவுகள் இரண்டு தருக?

viii. வளங்களின் வினைத்திறனை மேம்படுத்துவதன் மூலம் நிலையான அபிவிருத்தியை அடைய உதவும் 3R எண்ணக்கருவின் இரண்டு முறைகளைக் குறிப்பிடுக?

ix. ஆசியான் (ASEAN) அமைப்பின் இரண்டு நோக்கங்களைக் குறிப்பிடுக?

x. தேசிய அரசுகளின் தோற்றத்திற்கான காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக?

(2x10=20 புள்ளிகள்)

02. i. அரசின் பிரதான வகைகள் இரண்டினையும் குறிப்பிடுக?

(2 புள்ளி)

ii. அரசாங்க முறைகளின் வகைகளில் சனாதிபதி அரசாங்க முறையின் பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக?

(3 புள்ளி)

iii. அரசாங்கம் ஒன்றின் பிரதான மூன்று கூறுகளையும் (துறைகள்) குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக?

(5 புள்ளி)

03. i. சட்டத்தின் மூலாதாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

(2 புள்ளி)

ii. இலங்கையில் உயர்நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மூன்றினைக் குறிப்பிடுக?

iii. இலங்கையில் நீதிமன்ற நடவடிக்கைகளில் சட்டம்தொடர்பான உயர்அதிகாரிகள் என்ற அடிப்படையில்

a.நீதி அமைச்சரின் கடமைகள் இரண்டினைக் குறிப்பிடுக?

(2 புள்ளி)

b.சட்டமா அதிபரின் அதிகாரங்கள் மூன்றினைக் குறிப்பிடுக?

(3 புள்ளி)



kalvi.lk

04. i. பண்பாட்டின் கூறுகள் நான்கினைக் குறிப்பிடுக?

(2 புள்ளி)

ii. பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் நல்லாட்சியின் அடிப்படைப் பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக?

(3 புள்ளி)

iii. பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் தோற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(5 புள்ளி)

05. i. நுகர்வுப் பொருட்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

(2 புள்ளி)

ii. முதலாளித்துவ பொருளாதார முறையின் அடிப்படைப் பண்புகள் மூன்று தருக?

(3 புள்ளி)

iii. ஒரு நாட்டின் பொருளாதாரம் ஒன்றின் பிரதானமான செயற்பாடுகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(5 புள்ளி)

06. i. தூதுவர் ஒருவரின் பொறுப்புக்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

(2 புள்ளி)

ii. சர்வதேச உறவுகளில் நல்விளைவுகள் மூன்றினைக் குறிப்பிடுக?

(3 புள்ளி)

iii. சர்வதேச வர்த்தகத்தின் இரு வகைகளைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினைப்பற்றி சுருக்கமாக விளக்குக?

(5 புள்ளி)

07. i. மனித உரிமைகளை வென்றெடுப்பது தொடர்பாக முக்கியத்துவம் பெறுகின்ற வரலாற்று ரீதியான இரண்டு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக?

(2 புள்ளி)

ii. சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூன்று தருக?

(3 புள்ளி)

iii.a. (CEDAW) சீடோவ் உடன்படிக்கையின் அடிப்படை நோக்கம் என்ன?

(2 புள்ளி)

b. இந்த உடன் படிக்கையின் அடிப்படையில் பெண்களுக்கு உரித்தான உரிமைகள் மூன்றினைக் குறிப்பிடுக?

(3 புள்ளி)



kalvi.lk

# GRADE 6-11

STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினுடாக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page